செய்தி வெளியீடு எண். 209 நாள். 17.04.2018

**சென்னை, கூடுதல் தொழிலாளர் ஆணையர் அலுவலக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் முத்திரை ஆய்வர் அலுவலகங்களில் காலியாக உள்ள முத்திரை கொல்லர் பணியிடத்துக்கு விண்ணப்பிக்கலாம் - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ,ப., அவர்கள் அறிவிப்பு**

சென்னை கூடுதல் தொழிலாளர் ஆணையர் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய முத்திரை ஆய்வர் அலுவலகங்களில் காலியாக உள்ள 16 முத்திரை கொல்லர் பணியிடங்கள் இனசுழற்சி விதிகளின் அடிப்படையில் நேரடி நியமனம் மூலமாக நிரப்பப்பட உள்ளன. இதற்கான வயது வரம்பு 01.07.2017 அன்று 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். பொதுப்பிரிவினர் 01.07.2017 அன்று 30 வயதுக்குள்ளும், பிற்படுத்தப்பட்ட வகுப்பு, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் 32 வயதுக்குள்ளும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவைச் சார்ந்தவர்கள் மற்றும் ஆதரவற்ற விதவை ஆகியோர் 35 வயதுக்குள்ளும் இருக்க வேண்டும்.

இதற்கான விண்ணப்பங்களை கூடுதல் தொழிலாளர் ஆணையர், சென்னை, தொழிலாளர் இணை ஆணையர் - 1, சென்னை, தொழிலாளர் இணை ஆணையர்-2, சென்னை மற்றும் தொழிலாளர் இணை ஆணையர், வேலூர் ஆகிய அலுவலகங்களிலும், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், வேலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய அலுவலகங்களிலும் கட்டணம் ஏதும் இன்றி பெற்றுக் கொள்ளலாம். இந்த விண்ணப்பங்களை பூர்த்தி செய்து வேலைவாய்ப்பு அட்டை, முன்னுரிமைக்கான சான்றிதழ்கள், கல்வி சான்றிதழ்கள் ஆகியவற்றை இணைத்து 10.05.2018 அன்று மாலை 5.30 மணிக்குள் நேரிலோ அல்லது பதிவு தபாலிலோ கிடைக்கும்படி கூடுதல் தொழிலாளர் ஆணையர் அலுவலகம், தொழிலாளர் நல வாரிய கட்டிடம், 6-வது தளம், டி.எம்.எஸ் வளாகம், சென்னை – 600 006 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கூடுதல் விவரங்களுக்கு தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அலுவலகம், எண். 6/26, லால்பகதூர் சாஸ்திரி தெரு, பெரியக்குப்பம், திருவள்ளூர் - 602 001. தொலைபேசி எண்: 044-27667117 என்ற அலுவலகத்தை அணுகுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**